1979 பிப்ரவரி 24]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) செங்குழி, நாதன்கிணறு என்ற இடங்களில் சமுதாயக் கிணறுகள் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ளன. எருசலேமில் சமுதாயக் கிணறு இல்லை.

(ஆ) இவற்றை விரைவில் உபயோகத்திற்குக் கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, சமுதாயக் கிணறு எந்த அடிப்படையில் அமைக்கப்படுகிறது. அதனால் மக்களுக்கு என்ன நன்மை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கிணற்றிலே தண்ணீர் இருக்கும். அதனால் மக்களுக்கு பயனுண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 167, 168 ஆகியவை மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக் கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

சிதம்பரத்திலுள்ள பாளையங்கோட்டை ஏரி.

* வினா எண் 169—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் வட்டம், பாளையங்கோட்டை ஏரியை வலுவான அணையாக திருத்தியமைக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, சிதம்பரம் வட்டம் பளையங்கோட்டை ஏரி மிக முக்கியமான ஏரி. அதனால் நூற்றுக்கணக்கான பிற ஏரிகள் பாசனம் பெறுகின்றன. 1977, 1978 ஆம் ஆண்டுகளில் பெய்த பெருமழையின் காரணமாக ஏரியின் கரைகள் உடைப்பு எடுத்து பயிர்கள் அழிந்திருக்கின்றன. அதைப் போலவே பாண்டி ஏரி, சின்னபாண்டியன் ஏரி, நகரபாடி ஏரி போன்ற ஏரிகள் எல்லாம் உடைப்பு எடுத்து, சேதம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஏரிகளை எல்லாம் ஆழப்படுத்தி, கரைகளை வலுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே இந்த ஏரியைப் பொறுத்தவரையில் 533 ஏக்கர் பாசன வசதி உடையது. 1977 ஆம் ஆண்டில் இரண்டு உடைப்புகள் ஏற்பட்டு ஏறத்தாழ 12,000 ரூபாய் செலவில் அவைகள் அடைக்கப்பட்டன. மீண்டும் கரைகளை வலுப்படுத்துவதற்காக இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, இப்போது எவ்வளவு ரூபாய்க்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது ? சுற்றியுள்ள ஏரிகளையும் ஆழப்படுத்தி, கரைகளை வலுப்படுத்திக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இந்த ஏரியில் இரண்டு உடைப்புகள் ஏற்பட்டன. அதற்கு ஏறத்தாழ 12,000 ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. அதற்குமேல் இந்த ஏரியில் கரைகளை வலுப்படுத்துவது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

புதிய தொண்டியக்காடு வாய்க்கால் திட்டம்.

* வினா எண். 170—திரு பொ. உத்திராபதி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவேரி வளர்ச்சிப் பணித் திட்ட ஆய்வில் உள்ள நியூ தொண்டியக்காடு வாய்க்கால் திட்டத்தினை செயலாக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு : புது தொண்டியக்காடு வாய்க்காலை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தின் விரிவான ஆய்வு முடிவுற்று மதிப்பீடு மற்றும் வரைபடங்களும் தயாரிக்கப்பட்டுவிட்டு, இவற்றின் பரிசீலனையும் முடியும் தருவாயில் உள்ளன.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, இந்த நியூ தொண்டியக்காடு வாய்க்கால் பகுதியில் பல பள்ளப் பகுதிகள் இருக்கின்றன. மழை வரக்கூடிய காலங்களில் தொடர்ச்சியாக அந்த பள்ளப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் நாசமடைகிறது ; ஒவ்வொரு ஆண்டும் இந்த நிலை இருந்துகொண்டிருக்கிறது. நடவு நட்ட 3 மாதத்திலேயே அழிந்துவிடுகிறது. ஆகவே மேலும்காலம் கடத்தாமல் விரைவில் தொடங்கி, நிறைவேற்ற அமைச்சரவர்கள் வாக்குறுதி கொடுப்பார்ளா ?